249

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

அருளிச்செய்த

# திருவரங்கக் கலம்பகம்.

M. R. PRESS.

2 3 249
OFFICE OF THE ... REG... 17... MAD...

ஸ்ரீராமஜயம்.

# கோயிற்கலம்பகம்

என்னும்

# திருவரங்கக்கலம்பகம்

## மூலம்.

அழகிய மணவாளதாசர்

என்கிற

திவ்யகவி - பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

அருளிச்செய்தது.

இஃது

வித்வான்

கா. இராமசாமி நாயுடு அவர்களால்

பார்வையிடப்பட்டு,

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை.

1908௵ ஆகஸ்டு௴.

ஸ்ரீ

# திருவரங்கக் கலம்பகம்.

தனியன்கள் - நேரிசைவெண்பா.

ஆழ்வார்முன் பின்னவர்க்கு மாமறைதந் தார்தமிழால்
வாழ்வார் மணவாளர் மாண்பவருட் - டாழ்வாரு
மெய்ம்போ லவர்க்கு மிரங்கியரங் கக்கலம்ப
கம்போத நல்லவைத்தார் காண்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சொன்னேக்குப் பொருணேக்குந் தொடைநோக்கு நடைநோக்குந் துறையினேக்கோ, டெந்நோக்குங் காணவிலக்கிய மாவதன்றி யிதிலீடுபெட்டோர்; நன்னேக்கும் புத்தியும் பத்தியும் பெறுவர் முத்தியுண்டா நாமெனன்சொல் கேன், பன்னேக்க மணவாளர் பகரரங்கக் கலம்பகத்தைப் பாரீர் பாரீர்.

காப்பு - கட்டளைக் கலித்துறைகள்.

வேதந் தொகுத்துத் தமிழ்ப்பாடல் செய்த விமலன்பொய்கை, பூதன் மயிலையர் கோன்புகழ்ச் சேரன்புத்தூரன்றொண்டர், பாதந்தருந்துகண்மா மழிசைக்குமன் பாணன்மங்கை, நாதன் மதுரகவிகோதை பாதங்க ணண்ணுதுமே.

மறைப்பாற் கடலைத் திரு நாவின் மந்தரத்தாற் கடைந்து, துறைப்பாற் படுத்தித் தமிழா யிரத்தின் சுவையமிர்தந், கறைப்பாம் பணைப்பள்ளி யானன்பரீட்டங் களித்தருந்த, நிறைப்பான் கழலன்றிச் சன்மவிடாய்க்கு நிழலில்லையே.

பிடிக்கும் பரசமயக் குலவேழம் பிளிற வெகுண்
டடிக்குங் குரற்சிங்க வேறனை யானெழு பாருமுய்யப்
படிக்கும் புகழெம்பிராநுசமுனிபல் குணமும்
வடிக்குங் கருத்தினர்க்கே திருமாமணி மண்டபமே. (௫)

வானிட்ட கீர்த்திவளர் கூரத்தாழ்வான் மகிழவந்த
தேனிட்டதார் நம்பெருமாள் குமாரர் சிவனையன்
றுனிட்ட [illegible]பந்துடைத்தா ரரங்கர் சங்காழிப[illegible]
[illegible]ானிட்ட னென்றருள் பட்டர்பொற்றாள்கதி[illegible]ங்கமக்கே. ( )

மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

இவை - எட்டடித் தரவுகள். (௨)

சீர்பூத்த செழுங்கமலத் திருத்தவிசின் வீற்றிருக்கு
நீர்பூத்த திருமகளு நிலமகளு மடிவருடச்
சிறைப்பறவை புறங்காப்பச் சேனையர்கோன் பணிகேட்ப
நறைப்படலைத் துழாய்மார்பி ஞாயிறுபோன் மணிவிளங்க ;
வரியதா னவர்க்கடிந்த வைம்படையும் புடைதயங்கக்
கரியமால் வரைமுளரிக் காடூன்று கிடந்தாங்குப்
பாயிரநான் மறைபரவப் பாற்கடலுட் பருமணிச்சுட்
டாயிரவாய்ப் பாம்பணைமே லறிதுயிலி னினிதமர்ந்தோய்.
மண்ணகந் துயர்நீங்க வானகந் தொழுதேத்தக்
கண்ணகன்சோ ணாட்டுக் காவிரிவாய்ப் புளினத்துப்
பம்புகதிர் விசும்பிரவி பசும்புரவி வழிவிலங்கு
செம்பொன்மதி லேழுடுத்த திருவரங்கப் பெருங்கோயி
லாணிப்பொற் றகடுரிஞ்சு மணிக்கதவ நீள்வாயின்
மாணிக்க வெயில்பரப்பும் வயிரமணி விமானத்துண்
மின்னிலங்கு தொடிவலய வியன்வலக்கை கீழ்க்கொடுத்துத்
தென்னிலங்கைத் திசைநோக்கித் திருநயனந் துயில்வோய்கேள்.

இவை - ஈரடித்தாழிசைகள். (௬)

தேவராய்த் தேவர்க்குந் தெரியாத வொளியுருவாய்
மூவராய் மூவர்க்குண் முதல்வனாய் நின்றாய் நீ.

போற்றுவார் போற்றுவதுன் புகழ்ப்பொருளே யாத
லினால், வேற்றுவா சகமடியேன் விளம்புமா றறியேனால்.

பணித்தடங்கா திமையவர்க்கும் பங்கயத்தோன் முத
லோர்க்கும், பணித்தடங்காப் புகழடியேன் பணித்தடங்கற்
பாலதோ.

யாங்கடவுளென் றிருக்கு மெவ்வுலகிற் கடவுளர்க்கு
மாங்கடவு ணீயென்றா லஃதுனக்கு வியப்பாமோ.

அனைத்துலகு மளித்துயிரு மமைத்தளித்துத் துடைப்
பதுநீ, நினைத்தவினை யாட்டென்று னின்பெருமைக் களவா
மோ.

கருதரிய வுயிர்க்குயிராய்க் கரந்தெங்குந் பரந்துறையு
மொருதனிநா யகமென்றா லுன்புகழ்க்கு வரம்பாமோ.

இவை - ஈரடி அராகங்கள். (௪)

உருவென வருவென வுளதென விலதென
வருமறை யிறுதியு மறிவரு நிலைமையை.
இவரிவ ரிறையவ ரெனமன வுறுதியொ
டவரவர் தொழுவறு சமயமு மருளினை.
சுடுவளி கனல்புனல் ககனமொ டகலிட
முடுபதி கதிரவ னுருவமு மருளினை.
கடிமல ரடியிணை கருதினர் பெறுகென
வடிநடு முடிவற வருள்பர கதியினை.

இவை பெயர்த்தும் - ஈரடித்தாழிசைகள். (௪)

ஒருநாலு முகத்தவனோ டுலகீன்றா யென்பரதுன்
றிருநாபி மலர்ந்ததல்லாற் றிருவுளத்தி லுணராயால்.
மேருகிரி யுடலவுணன் மிடல்கெடுத்தா யென்பரதுன்
கூருகிரே யறிந்ததல்லாற் கோவேநீ யறியாயால்.
பன்றியாய்ப் படியெடுத்த பாழியா யென்பரது
வென்றியா ருனதெயிற்றின் மென்றுகள்போன் றிருந்ததால்.
அ[illegible] முன்னுடையென்பா ரறியாதா ராங்க[illegible]வநீ
[illegible]டருளுங் காலத்தி லொருதுற்றுக் காற்றாவால்.

இவை - நாற்சீர் ஓரடி அம்போதரங்கம். (௨)

நஞ்சமு மமுதமு நரகும் வீடுபோய்
வஞ்சமு ஞானமு மறப்பு மாயினை.
இருவினைப் பகுதியு மின்ப துன்பமுங்
கருணையும் வெகுளியுங் கருத்து மாயினை.

இவை - முச்சீர் ஓரடி அம்போதரங்கம். (௪)

அலைகடல் வயிறுக லக்கினை
யவுணரை மதுகைய டக்கினை.
மலைகட களிறுவ தைத்தனை
மலைதலை கவிழவெ டுத்தனை.

இவை - இருசீர் ஓரடி அம்போதரங்கம். (௮)

மண்ணை. விண்டனை.
வெண்ணெ யுண்டனை.
மருதிடந்தனை.
பெருக டர்ந்தனை.
யுண்ணி றைந்தனை.
யெண்ணி றந்தனை.
யொருமை யாயினை.
பெருமை மேயினை.

தனிச்சொல்.

எனவாங்கு.

பதினான்கடி நிலமண்டில ஆசிரியச்சுரிதகம்

மலர்தலை யுலகத்துப் புலமை சான்ற
பதின்மரும் பணித்த பாடலோ தையொடு
முதுமறை முழங்க முரச மார்ப்ப
வலம்புரி பிளிறும் பொலம்புரி கோயி
லாழியஞ் செல்வ வாதியம் பரம
வாழி வாழி மாயோய் வாழி
நெடியோய் வாழி நின்மாட் டொன்றே
யடியேன் வேண்டுவ தஃதுநீ மறுக்கேல்
பூவரு மயன்முதல் யாவரு மறியா
மூவுல களந்தநின் சேவடி வாழ்த்தித்
தொழுதகைத் தொண்டர்தந் தொண்டருட் சேர்க்கா
தெழுவகைத் தோற்றத் தின்னாப் பிறப்பி
னென்பொழி யாக்கையுட் சேர்ப்பினு மவர்பா
லன்பொழி யாமை யருண்மதி யெனக்கே. (௧)

நேரிசைவெண்பா.

எனக்கே திருவரங்க னேபிரா னெம்மான்
றனக்கே யடிமை தமியேன் — புனக்கேழ்
மருத்துளவோன் மேலன்றி மற்றொருவர் மேலென்
கருத்துளவோ வாராயுங் கால். (௨)

கட்டளைக்கலித்துறை.

நாலா யிரமுடி யாயிர மாயிரங் கைபரப்பி, மேலா யிரந்தலை நாகங் கவிப்பவின் பூத்தகஞ்சம், போலாயிரங் கண் வளரும்பி ரான்பொன் னரங்கனென்றே, மாலா யிரங் கவல்லார்க் கெய்தலாந் திரு வைகுந்தமே. (௩)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வைகலந்த மூவிலேவே வீசற்கும் வாசவற்கும் வாசப் பூமேமன், மெய்கலந்த நால்வேத விரிஞ்சனுக்கு மேலாய்வீற் றிருப்பர் மாதோ, பைகலந்த பாம்பணைமேற் றிருவரங்கப் பெருநகருட் பள்ளிகொள்ளுங், கைகலந்த நேமியான் றிரு நாமத் தொருநாமங் கற்றார் தாமே. (௪)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கற்றா ரெனினும் பதினா லுலகுங் கண்டா ரெனினுந் தண்டா மிகுபற், றற்றா ரெனினுந் திருமா லடியா ரல்லா தவர்வீ டில்லாதவரே, பொற்றா மரையாள் கணவன் றுயி லும் பொற்கோ யிலையே புகழ்வார் பணிவார், மற்றா ரெனி னும் பெற்றா ரவரே வானோர் திருமாமணி மண்டபமே. (௫)

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியச் சந்தவிருத்தம்.

மண்டலமும் விண்டலமு நின்றவட குன்றமும் வரைத் தமலை யுங்கடலுமே, தண்டமும கண்டமும யின்றவர் தமின் றருள ரும்பதிவி ரும்பினவிற், கொண்டல்குழ் றுங்குடகி ழிந்துமத குந்தியகில் கொண்டுநுரை மண்டிவருநீர், தெண் டிரை தொருந்தரள முங்கனக முஞ்சிதறு தென்றிருவ ரங் கநகரே. (௬)

புயவகுப்பு — ஆசிரியவண்ண விருத்தம்.

நருகதிர் வழங்கு தகடுபடு செம்பொ
னவமணி குயின்ற தொடியணியணிந்து
ககனவிலிடுநீல வெற்பொத்திருந்தன,

நதியபுதுமன்ற லிசைமுழுதுமண்ட
நறவுகுதி[illegible]கொண்ட தளவணியலங்கல்
மது[illegible]யொருகோடி. சுற்றப்புணர்ந்தன,
நளினமடமங்கை குவலயமடந்தை
[illegible]னகனுதனங்கு பொதுவர்மகளென்றிவ்
வனிதையர்தனபார மொத்தக்குழைந்தன,
[illegible]திபதிசூழன்று கதறிநுரைசிந்த
வரவ்கடுரிஞ்சி யலறவலமந்து
வடவரையுடைய நட்டுக்கடைந்தன;
[illegible]கலியிருகுன்றி லிருசுடரெழுந்து
பொருவதெனவிம்ப மதிமுகமிலங்கு
மிருகுழையிருபாட லைப்பச்சிறந்தன,
இணையறநிமிர்ந்து வலியொடுதிரண்டு
புகழொடுபரந்து புழுகொடுமிளிர்ந்து
கலவையினணிசேறு துற்றுக்கமழ்ந்தன,
எதிரொருவரின்றி யகிலவுலகுந்த
னடிதொழவிருந்த விரணியன்மடங்க
முரணியவரைமார்ப மெற்றிப்பிளந்தன,
[illegible]றிகடல்கலங்கி முறையிடவெகுண்ட
நிசிசரரிலங்கை யரசொடுமலங்க
வொருசிலையிருகால்வ ளைத்துச்சிவந்தன;
[illegible]பிருக்ளவினின்ற விளவுகனிசிந்தி
மய[illegible]டுகன்று குணிலெனவெறிந்து
[illegible]பறவையினகல்வாய்கி ழித்துப்பகிர்ந்தன,
[illegible]ப்படுகுருந்தை முறிபடவடர்ந்து
குடநடமகிழ்ந்து குரவைகள்பிணைத்து
பொருதொழிலெருதேழு செற்றுத்தணிந்தன,

வெடிபடமுழங்கி யெழுமுகிலுமண்ட
ரொடுநிரைதியங்க வெறிதிவலைகண்டு
தடவரைகுடையாவெ [illegible]துச்சுமந்தன,
விழிவடவைபொங்க வெதிர்பொரநடந்த
களிறுளம்வெருண்டு பிளிறிடமுனிந்த
புகர்முகவிருகோடு பற்றிப்பிடு[illegible]கின,
அகலிடமுழும்ப ருலகமுநடுங்கி
யபயமடியெங்க ளபயமெனவந்து
விழுதொறுமிடையூற கற்றிப்புரந்தன,
அருகுறவிளங்கு மெரிதிகிரிசங்கம்
வெயிலொருமருங்கு நிலவொருமருங்கு
மெதிரெதிர்கதிர்வீச விட்டுப்பொலிந்தன,
அருமறைதுணிந்த பொருண்முடிவையின்சொ
லமுதொழுகுகின்ற தமிழினில்விளம்பி
யருளியசடகோபர் சொற்பெற்றுயர்ந்தன,
அரவணைவிரும்பி யறிதுயிலமர்ந்த
வணிதிருவரங்கர் மணிதிகழ்முகுந்த
ரழகியமணவாளர் கொற்றப்புயங்களே. (௭)

நேரிசைவெண்பா.

புயநான் குடையானைப் பொன்னரங்கத் தானை
அயனைத் திருவுந்தி யானை — வியனாம்
பரகதிக்குக் காதலாய்ப் பாடினேன் கண்டீர்
நரகதிக்குக் காணாம னான். (௮)

கட்டளைக்கலித்துறை.

நானந்த வைகுந்த நாடெய்தி வாழிலென் ஞாலத்த[illegible]றி
ஈனந்த வாத நிரயத்து வீழிலென் யானடைந்தேன்
கோனந்தன் மைந்தனை நான்முகன் றந்தையைக் கோயிலச்சு
தானந் தனையெனக் காரா வமுதை யரங்கனையே. (௯)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அரவிண டித்தாலு முரவிலெ டித்தாலு
மட்டவிக டந்தானும் புடவியி டந்தானும்
குரவையி ணைத்தானும் பரவைய ணைத்தானுங்
கோசலை பெற்றானும் வீசலையுற்றானும்
முரனைய றுத்தானுங் கரனையொ றுத்தானு
முத்திய ளித்தானு மத்திவி ளித்தானும்
பரமப தத்தானுஞ் சரமவி தத்தானும்
பாயல்வ டத்தானுங் கோயிலி டத்தானே. (௧0)

கட்டளைக்கலித்துறை.

தானே தனக்கொத்த தாட்டா மரைக்குச் சரண்புகுந்தா
ளானே னினியுன் னருளறி யேனென தாருயிரே [வாங்
தேனையென் றீவினைக் கோர்மருந் தேபெருந் தேவர்க்கெல்
[illegible] தரவணை மேற்பள்ளி கொண்டவனே. ()

மேகவிடுதூது-நேரிசைவெண்பா.

கொண்டல்காளும்மைக்குவித்தேதொழுகின்றேன்
அண்டாவாலுவரங்கத்தம்மானைக்—கண்டு
மனத்துளவத்தைப்படுமென்மையெல்லாஞ்சொல்லிப்
புனத்துளவத்தைக்கொணரீர்போய். (௧௨)

கலிவிருத்தம்.

போயவனி யிற்சிலபு றச்சமய நாடும்
பேயறிவை விட்டெழுபி றப்பையும றுப்பீ
ராயனைய னந்தனைய னந்தசய னத்தெம்
மாயனைய ரங்கனைவ ணங்கிமரு வீரே. (௧௩)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மருவு தந்தையுங் குருவுமெந்தையு மருள்கொ டுப்பது
மருள்கொ டுப்பது, முருகு நெஞ்சமும் பெருகு தஞ்சமு

முரிய ஞானமும் பெரிய வானமுந், திருவரங்கனா ரிருவ
ரங்கனார் செங்கண் மாயனா ரெங்க ளாயனா, ரருண்முகுந்த
னார் திருவைகுந்தனா ரமல நாதனார் கமல பாதமே. (௧௪)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பாதியா யழுகியகால் கையரேனும்
பழிதொழிலு மிழிகுலமும் படைத்தா ரேனும்
ஆதியா யரவணையா யென்ப ராகி
லவரன்றோ யாம்வணங்கு மடிக ளாவார்
சாதியா லொழுக்கத்தான் மிக்கோ ரேனுஞ்
சதுர்மறையால் வேள்வியாற் றக்கோ ரேனும்
போதினான் முகன்பணியப் பள்ளிகொள்வான்
பொன்னரங்கம் போற்றாதார் புலையர் தாமே. (௧௫)

கட்டளைக்கலித்துறை.

புலையாம் பிறவி பிறந்தென்செய் தோம்பொன்ன[illegible] பொ
ன்கொழிக்கு, மலையார் திருவரங் கத்தெம்பி ரானம[illegible]தன்னை
யொடுங், தொலையாத கானங் [illegible] நாட்டடங் கோறு[illegible]
புல்லாய்ச் [illegible]லையாய்க் கிடந்திலமே நெஞ்ச மேகழ நீண்டு
[illegible]கைக்கே. (௧௬)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தீண்டா வழும்புஞ் செந்நீருஞ் சீயு நரம்புஞ் செறி
தசையும், வேண்டா நாற்ற மிகுமுடலை வீணே சுமந்து மெ
லிவேனை, நீண்டாய் தாண்டா விளக் கொளியாய் நின்றா
யொன்றா யடியாரை, யாண்டாய் காண்டா வனமெரித்த வ[illegible]
ங்கா வடியேற் கிரங்காயே. (௧௭)

தவம் – கலிநிலைத்துறை.

காயிலை தின்றுங் கானிலு றைந்துங் கதிதேடித்
தீயிடை நின்றும் பூவலம் வந்துந் திரிவீர்கா

டாயினு மன்பன் பூமக ணன்பன் றடநாகப்
பாயன்மு குந்தன் கோயில ரங்கம் பணிவீரே. (கஅ)

இதுவுமது - கட்டளைக்கலித்துறை.

வீராங் காகிய வைவரை மாற்றி விடவரவின்
பேராங் காக நடித்தபொற் றாள்பற்றிப் பொன்னி நன்னீர்ச்
சீராங் காவின் றெழும்பனென் றேசிந்தை செய்யிலது
கூராங் காவெனஞ்ச மேவஞ்ச மாயக் கொடுவினைக்கே. ()

நேரிசை வெண்பா.

கேசவனை யேசெவிகள் கேட்க திருவரங்கத்
தீசனையே சென்னி யிறைஞ்சிடுக—நேசமுடன்
கண்ணனையே காண்கவிரு கண்ணிணர்கொள்காயாம்பூ
வண்ணனையே வாழ்த்துகவென் வாய். (உ0)

இரங்கல்-எழுசீர்க்கழி நெடில் ஆசிரியச்சந்தவிருத்தம்.

வாயினி ரங்கினை யாரமெ ழிந்தனை வால்வளை சிந்தினை தண்
பாயலை யுந்தினை மாலையா டைந்தனை பாரி லுறங்கிலை யாற்
கோயில ரங்கனை மாகன கந்திகழ் கோகன கம்பொலிவு
மாயிழை நண்பனை நீயும் விரும்பினை யாகுநெ டுங்கடலே.

இதுவுமது-கலிநிலை வண்ணத்துறை.

கடல்வழி விடநிசி சரர்பொடி படவிரு கண்சிறி
தடகயி லையிலெழு விடைதழு வியதும நந்தாரோ
வடலர வமளியி லறிதுயி லமரும ரங்கேச
ரிடர்கெட வருகிலர் முருகலர் துளவுமி ரங்காரே. (உஉ)

நேரிசை வெண்பா.

இரங்கத் தனித்தனியே யெய்துகின்ற துன்பத்
தரங்கத்தை யேதாற் றடுப்பீ—ரரங்கர்க்குத்

கஞ்சந் திருப்பாதங் கார்மேனி யென்றவர்பா
னெஞ்சந் திருப்பாத நீர். (௨௩)

இரங்கல் - தாழிசை.

நீரிருக்கமட மங்கைமீர்கிளிக டாமிருக்கமது கரமெ
லா, நிறைந்திருக்கமட வன்னமுன்னநிரை யாயிருக்கவுரை
யாமல்யா, ஞாிருக்கிலுமெ னெஞ்சமல்லதொரு வருச
மற்றதுணை யில்லையென், றுதாரத்தினொடு தூதுவிட்டபிழை
யாரிடத்துரைசெய் தாறுவேன், சீரிருக்குமறை முடிவுமே
டரிய திருவரங்கரை வணங்கியே, திருத்துழாய்தரில் விரும்
பியே கொடு திரும்பியேவருத லின்றியே, வாரிருக்குமுலை
மலர்மடந்தையுறை மார்பிலேபெரிய தோளிலே,மயங்கியின
புற முயங்கியென்னையு மறந்து தன்னையு மறந்ததே. (௨௪)

இதுவுமது - நேரிசைவெண்பா.

மறக்குமோ காவின் மதுவருந்தி யப்பாற்
பறக்குமோ சந்நிதிமுன் பாமோ—சிறக்கத்
தருவரங்கள் கேட்குமோ தாழ்க்குமோ நெஞ்சே
திருவரங்கர் பாற்போன தேன். (௨௫)

அம்மானை - மடக்குக்கலித்தாழிசை.

தேனமருஞ் சோலைத் திருவரங்க ரெப்பொருளு
மானவர்தா மாண்பெண் ணலியலர்காணம்மானை
யானவர்தா மாண்பெண் ணலியலரேயாமாகிற்
சானகியைக் கொள்வரோ தாரமா யம்மானை
தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தா லம்மானை. (௨௬)

இரங்கல் - மடக்குத்தாழிசை.

மானையெய்தவ ரின்னமென்மட மானையெய்திலர் நேமியான்
மாலை தந்தவர் பைந்துழாய்மது மாலைதந்தில ரிந்திரன்
சோனைமாரிவி லக்கிவிட்டவர் சொரிகண்மாரிவி லக்கிலார்

சுரர்களுக்கமு தங்கொடுத்தவர் சோதிவாயமு தங்கொடார்
தானையவர்கொ டிக்களித்தவர் தானைகொண்ட தளிக்கிலார்
சங்கரற்கிர வைத்தடுத்தவர் தையலுக்கிர வைத்தடா
ரானைமுன்வரு மன்புளார்முலை யானைமுன்வரு மன்பிலா
ரவரியரங்கர்ந டத்துநீதிய நீதியாக விருந்ததே. (உஎ)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இருளினும் வெளியினு மருளினுந் தெருளினு
மின்பமே யடையினுந் துன்பமே மிடையினு
மொருவர்முன் புகழினு மிருவர்பின் பிகழினு
மூனிறந் தழியினும் யான்மறந் தொழிவனோ
சுருதிநின் றோலிடுங் கரதலந் நாலொடுந்
துவளுநூன் மார்பமும் பவளவாய் மூரலுந்
திருவரங் கேசர்தஞ் சுருள்கருங் கேசமுஞ்
செய்யநீண் முடியுமத் துய்யசே வடியுமே. (உஅ)

நேரிசை வெண்பா.

சேவடியான் மூவடிமண் டென்னரங்கத் தம்மானீ
மாவலிபால் வாங்கியநாண் மண்ணுலகோ—மூவுலகும்
வீசுங்கா லோவலிய வெவ்வினையே நெஞ்சமோ
பேசுங்கா லேதோ பெரிது. (உகூ)

நாரைவிடுதூது - கட்டளைக்கலித்துறை.

பெருவரங் கேசவ னல்லா தருள்செய்யும் பேரிலைவே
றொருவரங் கேசற்று மோதாரென் காதலையோடியெங்குங்
கருவரங் கேசவிக் கத்திரி வோர்க்குக் கருணைசெய்யுந்
திருவரங் கேசற்கு நீசொல்லல் வேண்டுஞ் செழுங்குருகே.

இரங்கல் - தாழிசை.

குருகுறங்கு கானலே கருநிறங்கொள் பானலே
கொடியிருண்ட ஞாழலே நெடியகண்ட னீழலே

பொருதரங்க வேலையே நிருதரங்க மாலையே
போதயின்ற கம்புளே யேதையின்றி யம்புகேன்
திருவரங்க ...லா வொருபுயங்க வணையிலே
திகழ்வலக்கை கீழதா முகிழ்மலர்க் கண்வளர்வதோர்
கருணைநம்பு வதனமு மருணவிம்ப வதரமுங்
காவிகொண்ட மேனியு மாவிகொண்டு போனவே. ()

பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

போனகம் பதினாலு புவனந் திருப்பள்ளி பொறியரவ ணைப்பாற்கடல், பூமடந் தையுநிலை மடந்தையுந் தேவியர்பு ராதனம றைக்குமெட்டா,—வானகம்பேரின்ப முடன்வீற்றி ருக்குமிடம் வாகனம் வயினதேயன், மலர்வந்த நான்முகன் திருமைந்த னவன்மைந்தன் மதிசூடி வாசவன் முதற்,—றேனருந் தொடைமௌலி முப்பத்து முக்கோடி தேவருன தேவல் செய்வோர், திங்களும் பரிதியுஞ் சங்கமுந் திகிரியுந் திரிவனவு நிற்பனவுமா,—மேனமன் னுயிர்முழுதும் விளை யாட னீவகுத் திட்டபல மாயையதனு, லெழிலரங் கந்துயிலு மெம்பிரா னின்பெருமை யாவரே வாழ்த்துவாரே. (௩௨)

இரங்கல் - இதுவுமது.

வாழு மவுலித் துழாய்மணமு மகரக் குழைதோய் விழியருளு, மலர்ந்த பவளத் திருநகையு மார்பிலணிந்த மணிச்சுடருந்,—தாழுமுளரித் திருநாபித் தடத்து ளடங்கு மணைத்துயிருஞ், சரண கமலத் துமைகேள்வன் சடையிற் புனலுங்காணேனு,—லாழமுடைய கருங்கடலி னகடு கிழி யச் சுழித்தோடி, யலைக்குங் குடகா விரிநாப்ப ணைவாயரவிற்

யயில்முதை,—யேழுபிறப்பி லடியவரை யெழுதாப்பெரிய பெருமானை, யெழுத வரிய பெருமானெனன் றெண்ணு தெழுதி யிருந்தேனே. (௩௩)

இதுவுமது - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இருங்குங் குமத்தோ ளரங்கேசர் முன்னு ளிலங்கா புரங்கா வலன்காலி னல்வீழ், கருங்குன் று போன்மன் முகங்குத்தி வீழக் கண்டா ரெனக்கின்று தண்டா ரளித் தான், மருங்கெங்கும் வம்போது வார்வா யடங்கும் வாடைக்கு நிலமங்கை யாடைக்கு நோகேன், நெருங்குங் தனஞ் சந் தனம்பூச லாகு நீளாதிராமையன் மீளா திராதே. (௩௪)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தேடு கின்றனை யைம்பொறி களுக்கிரை தேடியுங் கிடையாமல், வாடு கின்றனை வீடுசென் றென்பினி மருவுவை மடநெஞ்சே, ஆடு கின்றிலை யழுகிலை தொழுகிலை யரங்கனைக் கரங்கூப்பிப், பாடு கின்றிலை பிணிகிலை பதின்மர் தம் பாடலின் படியாயே. (௩௫)

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஆயினை மனையைச் சேயினைப் பிதாவை யனத்தினைத் தனத்தினை விரும்பும், பேயினை மறந்து நோயினை மூப்பைப் பிறப்பினை யிறப்பினைத் துடைப்பீர், ஆயனை மூளரி வாயனை யெங்களமலனைக் கமலனைப் பயந்த, தாயனை நெடிய மாயனை வடபாற் றரங்கனை யரங்கனைத் தொழுமே. (௩௬)

மடக்குக் கட்டளை மண்டிலக்கலிப்பா.

தொழப்பெ ருகுந்த வாரணத் தந்தமே
தொட்டி றந்ததும் வாரணத் தந்தமே
வழுத்து தாண்முப்பு வணங்க டந்ததே
மலர்ந்த வுந்தி புவணங்க டந்ததே,

அழித்த துங்குழைச் சங்கரன் சாபமே
யொசித்த துங்குழைச் சங்கரன் சாபவே
அழிந்த தும்பொரு தானவ ரங்கமே
யரிந்த னூரினி தானவ ரங்கமே. (௯எ)

நேரிசை ஆசிரியப்பா - உயிர்வருக்கமோனை.

அரங்க மாளிகைக் கருங்கடல் வண்ணனை
ஆலிமா முகிலை வாலி காலனை
இந்த ளூருறை யெந்தையெம் மானை
ஈச னுன்முகன் வாசவன் றலைவனை
உள்ளுவா ருள்ளத் துள்ளுறை சோதியை
ஊரக நின்றரு ணீரகத் தடிகளை
எவ்வுண் மாயனைத் தெய்வ நா யகனை
ஏர்மலி சிகரத்து நீர்மலை யாதியை
ஐவா யரவி லறிதுயி லமலனை
ஒருகான் மொழியினு மொழுகுவை நெஞ்சே
ஓதநீர் ஞாலத் துழலும்
ஔவியப் பிறப்பி லழுந்திவா டுவதே. (௯அ)

இரங்கல் - தாழிசை.

வாடியோட வனசமன்ன விருகண்வெள்ள மருவிபோன்
மருவியோட மதனன்வாளி யுருவியோட வாடையூ
டாடியோட வன்றிலோசை செவியிலோட வண்டுழா
யாசையோடு மெங்கள்பேதை யாவியோட னீதியோ
மோடியோட வங்கிவெப்பு மங்கியோட வைங்கரன்
முடுகியோட முருகனோட முக்கணீசன் மக்களைத்
தேடியோட வாணனாயி ரம்புயங்கள் குருதிநீர்
சிந்தியோட நேமிதொட்ட திருவரங்க ராசரே. (௯௯)

கலிச் சந்தவிருத்தம்.

சருகருந்தியைம் பொறிவருந்தருந் தவர்களண் டர்
குஞ் சரமுகன்குகன், பரிதிசந்திரன் சிவனயன் புரந் தரனி

ரந்தரம் பரவுமெக்கைதயூர், குருகை தஞ்சைதென் கணபுரங்
குறுங் குடிகுடந்தைவண் டுவரையிந்தளூர், திருவைகுந்த
மஞ் சனசிலம்பயிந் திரபுரஞ்செழுந் திருவரங்கமே. (௪௰)

மடக்குக் கொச்சகக்கலிப்பா.

திருவரங்கந் திருக்கோயில் சேர்ந்துமது திருக்கோயில்
தருவரென்றும் வைகுந்தந் தயங்கொளிசேர் வைகுந்தம்
ஒருமருங்கி னந்துடையா ரொழிந்தொர்சன னந்துடையார்
மருவமறந் திருப்பீரே வணங்கமறந் திருப்பீரே. (௪௧)

சித்து - கட்டளை நிலைகலிப்பா.

திருப்பொற் பாவைக்குக் கஞ்சம்பொன் னாக்கிய
சித்த ரேஞ்சுத்தக் காயாம லரென
உருப்பொற் பானதி ருவரங் கேசனு
ரூர கத்துமின் ரூர்சென்றி றைஞ்சினேம்
இருப்புப் பாடகங் காட்டினர் யாமவர்க்
கிரும்பை யாட[illegible] மாக்கின மீயத்தை
நருக்கி வெள்ளிய தா[illegible]கவு ருக்குவோ
நமது வித்தைக்க மூதேய ருமையே. (௪௨)

இதுவுமது - கட்டளைக்கலித்துறை.

அரும்பித் தளையவி[illegible] நாண்மாலை மார்ப னரங்கனெங்கள்
மெரும்பி[illegible]றப்புறுத் தாண்டபி ரான்சித்தரேம்
தரும்பித் தளையுந் தராவும்பொன் னாக்கித் தருவெமப்பா
திரும்பித் தளையினு நெய்பா லமுதினுஞ் சிந்தனையே. (௪௩)

நேரிசைவெண்பா.

அ[illegible]க்கத் தித்திக்குஞ் செவ்வாய் துவர்த்துப்பாம்
புந்[illegible]ளையின் புளிமேவு—நந்தங்
க[illegible]வரங்கங் கைத்தழலுங் காவிரியி னூடே
திருவரங்கத் தேவளருந் தேன். (௪௪)

கட்டளைக்கலித்துறை.

தேனந்து சோலை யரங்கேசர் சேவடி மேல்விசயன்
தானந்த நாளையிற் சாத்திய மாலையுந் தாள் விளக்கும் [ற
வானந் தருங்கங்கை நன்னீருஞ் சென்னியில் வைக்கப்பெற்
வானந்தந் தானல்ல வோமுக்க ணன்மன்று ளாடுவதே. ()

இரங்கல் - எண்சீர்க்கழிநெடில் ஆசியவிருத்தம்.

ஆடும் படநா கணைமே லணையு மமலன் கமலத்தவ னுஞ் சிவனும், நாடுந் திருமா றுயில்கோ யிலின்வாய் நறைவார் பொழிலூ டுறைவா ரளகக், காடுங் குழையைச் சாடுங் குவளைக் கண்ணுங் குதலைப் பண்ணுங் கரியின், கோடுந் தரளத் தோடும் புருவக் கோதண் டமுமே மூதண் டமுமே.

கைக்கிளை - எழுசீர்க்கழிநெடில் ஆசிரியச்சந்தவிருத்தம்.

அண்டமுழு துண்டவ ருமிழ்ந்தவ ரிடந்தவ ரளந்தவர் வளர்ந்தரு ளுமா, சண்டபண வந்தலை யனந்தசய னந்திகழ் தருந்திருவ ரங்கர்வரை மேற், கண்டதொரு கொம்பதி லிரண்டுமக ரங்களொரு கஞ்சமிரு வெஞ்சிலை மணங், கொண்டதொரு கொண்டலிரு கெண்டையொரு தொண்டையிரு கும்பமொரு செம்ப ணிலமே. (சஎ)

இரங்கல் - தாழிசை.

செம்பொன் னரங்கத் தரங்கநீர்ச் சீதள சந்திரவாவி சூழ், கம்புளு டன்பயி லுரைகாள் காதலை யென்சொலி யாறுவேன், வெம்பனி வந்தது வந்தபின் வேனி[illegible] வந்தது வேனில்போய்ப், பைம்புயல் வந்தது சென்[illegible]ாதகர் வந்திலர் காணுமே. ()

சம்பிரதம் - பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

காணாத புதுமைபல காட்டுவன் கட்செவிகளெட்டையு மெய்த்த தாட்டுவன், கடல்பருகு வன்பெரிய கனகவரையைச்சிறிய கடுகினி லடைத்து வைப்பன்,—வீணாரவாரமு தண்டமுற விளைவிப்ப னிரவுபகன் மாறுவேன், விண்ணையு மறைப்பனெழு மண்ணையு மெடுப்பனிவை விளையாடும் வித்தையென்றால்,—நீணாக ணைப்பள்ளி யிற்றிருவ ரங்கத்து நெடிதுயிற் றுயிலும்பிரான், நெற்றிக்கணானவனை நான்முகனை வாசவனை நிமிருமிரு சுடரை முதலாச்,—சேணாடர் யாவரையு மடிமைகொண் டவரவர் சிரத்திற் பொறித்துவிட்ட, திருச்சக் கரப்பொறி யிலாதவொரு கடவுளைத் தேடியினி முன்விடுவனே. (௪௯)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

முன்னமேழ் புரவியா ரிரவிகாய் வெயிலினான்
முத்தரும் பியகலா முழுமதித் திருமுகத்
தன்னமே யின்னமோர் காவதம் போதுமே
லகலுமிப் பாலையப் பாலரைக் காவதம்
என்னையா ளுடையவன் றுயிலரா வமளியு
மிலகுபொற் கோயிலு மிந்துவின் பொய்கையும்
புன்னைவாய் நீழலும் புரிசையும் மதுகரம்
பூவிரித் துறையுமக் காவிரித் துறையுமே. (௫௰)

கட்டளைக்கலித்துறை.

துறைமதி யாமலிக் கான்யாறு நீந்திச் சுரங்கடத்தல்
றிறைமதி யாளர்க் கொழுக்கமன் றானெடு மாலரங்கத்
திறைமதி யாவரு மாரா வமிர்தன்ன விந்தநுதற் [வனே.
குறைமதி யாள்பொருட் டாற்கங்குல் வாரலெங் கொற்ற

மறம் - அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கொற்றவன்றன் றிருமுகத்தைக் கொணர்ந்ததூதா
குறையுடனுக் கோமறவர் கொம்பைக்கேட்டாய்
அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாடோழ
னவதரித்த திருக்குலமென் றறியாய்நீனும்
மற்றதுதான் றிருமுகமே யானுலக்க
வாய்செவிகண் மூக்கெங்கே மன்னர்மன்னன்
பெற்றவிள வரசானு லாவின் கொம்பைப்
பிறந்தகுலத் துக்கேற்கப் பேசுவாயே. (௫௨)

இதுவுமது - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பேசவந்த தூதசெல்ல சித்தமோலை செல்லுமோ
பெருவரங்க ளருளரங்கர் பின்னைகேள்வர் தாளிலே
பாசம்வைத்த மறவர்பெண்ணை நேசம்வைத்து முன்னமே
பட்டமன்னர் பட்டதெங்கள் பதிபுகுந்து பாரடா
வாசலுக்கி டும்படல் கவித்துவந்த கவிகைமா
மகுடகோடி தினையளக்க வைத்தகாலு நாழியும்
வீசுசாம ரங்குடிற் றொடுத்தகற்றை சுற்றிலும்
வேலியிட்ட தவர்களிட்ட வில்லும்வாளும் வேலுமே. ( )

மடக்கு - நேரிசைவெண்பா.

வேலையுல கிற்பிறக்கும் வேலையொழிந் தோமில்லை
மாலையரங் கேசனை மாலையினுங்—காலையினும்
உன்னினைந்தோ மில்லை யுடலெடுத்த வன்றுமுதல்
என்னினைந்தோ நெஞ்சே யிருந்து. (௫௪)

இதுவுமது - கலிநிலைத்துறை.

இரும்புவனம் விரும்புவன மணியரங்கர் பணியரங்க ரிமயநண்ப, வருங்கொடியின் மருங்கொடியின் மனங்கு ழைக்குங் கனங்குழைக்கு மனங்கன்சாபக், கரும்புருவம பொரும்புருவ முத்தநகை யொத்தனகை காந்தள்பூந்தேன்,

13



மருங்குழலுங் கருங்குழலு முருகுவளை யிருகுவளை மழைக்கண்டாமே. (ருரு)

பதினான்குசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

[இதனுள் கேசாதிபாதவரை ௩௨ - அவயவங்களும்
அவற்றின் உவமானங்களோடு காண்க.]

ப[illegible] இலைவேல் வள்ளையெள் ளிலவின்
மலர்மு[illegible]லை மதி[illegible] கமழ்யாழ்
வாரிசங் கெளிறு[illegible] கவாய் கலச
மணிவட ப[illegible]ர மெறும்பூர்.
அழகுநீர்த் தரங்கத் தடிசுழி யரவ
மரம்பைபொருண் டிளவரா லாமை
பணிதரா பிணைகந் துகந்துகிர் தரள
மம்புப மாங்கரு டணையார்.
குழனுதல் புருவம் விழிலாசனங் காது
நாசிவாய் நகைமுகங் கண்டங்
குலவுதோண் முன்கை யங்கைமெல் விரல்கள்
கூருகிர் கொங்கைகண் வயிறு.
விழைதரு முழோராமம் வரையிடை யுந்தி
விரும்புமல் குற்றொடை முழந்தாண்
மிளிர்கணைக் கால்கள் புறவடி பரடு
மென்குதி விரனகந் தாளே. (ருசு)

கைக்கிளை - மருட்பா.

தாளிரண்டும் பாரொன்றுந் தார்வாடும் வேர்வாடும்
வாளிரண்டுங் காதிரண்டில் வந்திமைக்குங் - கோளிரண்டும்
ஐவகைப் பூத மமைத்தரு ளரங்கர்
மைவளர் சோலை மலையில்
தெய்வ மல்லளித் திருவரு வினளே. (ருஎ)

ஊசல் - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

உருமாறிப் பலபிறப்பும் பிறந்தாஞ் செத்து
முசலா டுவதடியே னொழியும் வண்ணம்
கருமாயத் தென்னெஞ்சைப் பலகை யாக்கிக்
கருணையெனும் பாசத்தைக் கயிறாய்ப் பூட்டி
மருமாலைத் துளவசைய வாடி யூசல்
மணிமகரக் குழையசைய வாடி யூசல்
திருமாது புவிமாதோ டாடி யூசல்
திருவரங்க ராசரோ டாடி யூசல். (ருஉ)

கலிநிலைத்துறை.

ஊசல்வ டம்போ லூர்சக டம்போ லொழியாமே
நாசவு டம்போ டாவிசு ழன்றே நலிவேனை
வாசவ னும்போ தாசன னுங்கூர் மழுவேனும்
நேசமுடன்சூழ் கோயில ரங்கா நெடியோனே. (ருங)

தழை - கட்டளைக்கலித்துறை.

நேசத் தழைக்கு மதயானை முன்புநின் றோனரங்கம்
பேசத் தழைக்குமென் னன்பனை யாய்பெருங் கற்பகத்தின்
வாசத் தழைக்கு நறுந்தழைக் காணிது மந்தத்தென்றல்
வீசத் தழைக்குந் தழைபோற் கெடாது விலையில்லையே. ()

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

விலையான திலையென்று நீதந்த முத்தம
வெய்தந்த முத்தாகில் வெற்பாவி யப்பா
லிலையார்பு னற்பள்ளி நாராய ணன்பா
லெந்தாய ரங்காவி ரங்காவெ னப்போய்த்
தலையாவி ரக்கும்ப ணிப்பாய் சுமக்குந்
தன்றாதை யவர்தாம ரைத்தாள்வி ளக்கும்
அலையாறு சூடும்பு ராணங்கள் பாடு
மாடும்பொ டிப்பூசி யானந்த மாயே. (ருச)

### தவம் - கட்டளைக் கலித்துறை.

ஆனந்தமாயரங்கற்கேயுயிர் களடிமையென்னும்
ஞானந்தனை ஐம்பொறி வாசல்சாத்தி நற்றுளைப்பற்றி
ஊனந்தரும் பற்றுமற்றென்றும யானெனதென்னுமபி
மானந்தவிர்ந் திருப்பார்க் கிதுபோலில்லை மாதவமே. (௬௨)

### இதுவுமது - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மாதவங்களென் றோத வங்களின் மருவு சிவனென் றொருவ னீபெறும், பூத மல்லையின் றிரிய மல்லையும் புலனு மல்லநற் புந்தி யல்லகாண், சீத ரன்பரந் தாமன் வாமனன் திருவ ரங்கனுக் கடிமை நீயெனக், கேத மில்லையென் றறிவ றிந்தபின் னீதின் மாதவமில்லை யெங்குமே. (௬௩)

### இரங்கல் - கட்டளைக்கலித்துறை.

எங்காந்த ளங்கைநகல் வீரென்செய் கேனிரண் டேடங் கிழுபார், தங்காந்த னென்றறிந் தாலு நில்லாது தனக்கு நெய்க்கும், அங்காந்த செம்பவளத் தெம்பிரானரங் கன்புயங்கள், செங்காந்த மால்வரையோ விரும்போ வென்றன் சிந்தனையே. (௬௪)

### களி - தாழிசை.

சிந்தையிற்குடி கொண்டிருந்து திருக்கறுத்தடிமைக் கொளுந், திருவரங்கர் பொருப்புயர்ந்த திருப்புயம்புகழ் களியரேம்,—புத்தி மிக்கது வந்துபுக்கது போதமாதர்க ளொழுவர்தம், பூசையேமக பூசை யென்றது புதுமையன் றிது புத்தர்காள்,—அந்தரத் திமையோரருந்து மருந்தும் வெள்ளைய தன்றியே, யரியசாதிகொ ளாதமானிட ரகவிடத் தினி யில்லையே,—மந்திரத்தினி லாதகேவலைத வானகத்

தினி வில்லையே, வடிவிலாதவனை யண்டகோளம் விளக்க வைப்பதி வில்லையே. (௧௫)

குறளடிவஞ்சிப்பா:-

இவை பத்தொன்பதும் வஞ்சி அடிகள்.

இல்லறமெனத் துறவறமெனச்
சொல்லறம்பிற அனையன்றெனப்
பவக்கிடனுட் டெலக்கழுப்பான்
தாவியிடைப் பூவிரிபொழிற்
சிலமந்திகள் சினைதாவப்
பலதெங்கின் பழக்குலையுதிர
அடர்கமுகின் மிடறொடிதரத்
தேமாங்கனி சிதறுபுவிழ
முடப்பலவின் குடக்கனியுக
வரம்பைக்கனி வரம்பிற்புக
வயன்மருங்கின் மலர்ப்பொய்கையுட்
டுயில்வலம்புரி துண்ணெனவுறத்
தாளட்டாமரைத் தவிசுறைதரு
ருட்டோதிமம் பேட்டொடனெழ
மயிற்சேவல் மனங்களிப்பக்
குயிற்பேடைக் குலமொளிப்ப
மழைமுகிலென முழவதிர்தரு
திருவரங்கப் பெருநகருள்
அரவணைமிசை யறிதுயிலமர்ந் தருள்புரி.

இது - ஈரடிநேரிசை ஆசிரியச்சுரிதகம்.

திருநாரணனைச் சேர்ந்தனரு
சரணாரவிந்தந் தஞ்சமென் றிரந்தே. (௧௬)

மடக்கு - எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இரவியை யிரவின் மதியினை மதியு ளிறையினை யிறையு மென்னரிய, கரவினைக் கரவின் முனிவினை முனிவர் கருத் தனைக் கருத்தனைத் தடைத்தாள், பரமனைப் பரம பதத்த னைப் பதத்துட் பாரனைப் பாரனைத்தாதும், அரவினை யாவி னரங்கனை யரங்கத் தடிகளை யடிகள்சே வியுமே. (௬௭)

இருபனிக்காலம் - கலித்துறை.

[illegible]விக்க வாழ்விக்கு [illegible]ங்கோ னரங்கன் திருக்கோ யில்சூழ், காவிற் கலர்தாசை தங்கக்கி ஞர்நெஞ்சு கன்னெஞ் சமோ, வாவிப் புறத்தன்ன மேயின்ன மேமோ வரக்கண்டி லேன், பாவிக்க நேகர் தனிக்கால மிந்தப் பனிக்காலமே.

குறம் - அ[illegible]சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

காலை முணர்ந்த குறத்திநான் கருதினை பொன்றனை சொல்லுவேன், பாலக [illegible]சியி லெண்ணெய்வார் பழகிய கோர்கலை [illegible]வா, கோல மலர்க்கை[illegible]ங்கைநின் கொங்கைமுழ கக்குவி கன்றுகாண், ஞாலமு வந்தி[illegible]லையே கண்ணுவை நம்பெரு மாளையே. (௬௯)

மேகவிடுதூது - கட்டளைக்கலித்துறை.

பெருமாளை யார்க்குரைப் பேனுமைக் கேவிண்டு பேசி னல்லாற், கருமாலை யாபெழுங் கார்க்குலங் காடொண்டர் காற்பொடிதன், திருமாலை கொண்டதிருமா லரங்கர்தந் தெய்வத்துழாய், மருமாலை வாங்கிவம் மின்னந்தி மாலை வரு முன்னமே. (௭௰)

நேரிசைவெண்பா.

முன்னம் பிறந்த பிறப்போ முடிவில்லை
இன்னம் பிறப்பிக்க வெண்ணு[illegible]த—தென்னரங்கம்
மேவிக் கிடந்தானே வீற்றிருந்து நின்பதத்தென்
றாவிக் கிடந்தா னருள். (எக)

இரங்கல் மடக்கு

பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அரும்புன் னகைத் தடங்காவே
யவாவென் னைத் தடங்காவே
யம்போ ருகக்கண் பொருந்தேனே
யழுநீ ருகக்கண் பொருந்தேனே
பரம்புங் கடலூர் நாவாயே
பாவிக் கடலூர் நாவாயே
பார்மீ துயர மதிப்பிலையே
படுமென் றுயர மதிப்பிலையே
கருங்கட் கயலே மாசுறவே
கரைமேற் கயலே மாசுறவே
கண்டற் போதுக்கு வாலுகமே
கங்குற் போதுக்கு வாலுகமே
குரும்பை தழைக்குங் கருப்பனையே
குயில்வந் தழைக்குங் கரும்பனையே
குருகீர் நந்த மாங்கரையே
கொணரீர் நந்த மாங்கரையே. (எஉ)

நேரிசை ஆசிரியப்பா.

இதனுள் பத்துத் தாமரைகளும் ஒன்பது
அதிசயங்களுங் காண்க.

கரைபொரு தொழுகுங் காவிரி யாறே
ஆற்றிடைக் கிடப்பதோ ரைந்தலை யரவே

அரவஞ் சுமப்பதோ ரஞ்சன மலையே
அம்மலை பூத்ததோ ரரவிந்த வனமே
அரவிந்த மலர்தொறு மதிசய முளவே
கடல்விளிம் புடுத்த கண்ணகன் ஞாலம்
உடன்முழு தளந்த தொருதா மரையே
வகிரிளம் பிறையான் வார்சடை தேங்கப்
பகிரதி கான்றதோர் பங்கே ருகமே
யாவையும் யாரையும் படைக்க நான்முகக்
கோவையீன் றதோர் கோக னகமே
திருமகட் கினிய திருமனை யாகிப்
பருமணி யிமைப்பதோர் பதும மலரே
சடைக்கலை தாழ்த்துச் சங்கர னிரப்ப
முடைத்தலை தவிர்த்ததோர் முளரிமா மலரே
ஆங்குமன் டோதரி யணிந்தமங் கலநாண்
வாங்கவில் வாங்கிய வனசமு மொன்றே
விரிந்தபுக ழிலங்கை வேந்தற்குத் தென்றிசை
புரிந்தருண் மலர்ந்ததோர் புண்டரீ கமே
மண்டிணி ஞாலமும் வானமு முட்பட
அண்டமுன் மிழ்ந்ததோ ரம்போ ருகமே
கடைசிவந்த கன்று கருமணி விளங்கி
யிடைசில வரிபரந் தினியவாய் நெடியவாய்
இன்பந் தழீஇய விருபெருங் கமலம்
துன்பந் தழீஇய தொண்டனே னையும்
உவப்புட னொருகா னோக்கிப்
பவக்கடல் கடக்கும் பரிசுபண் ணினவே. (எரு)

கார்காலம் - வண்டு - கலிநிலைத்துறை.

பண்கொண்ட வேயூது செவ்வா யரங்கேசர் பைம்
பொன்னிநாட், டெண்கொண்ட பேராசை தந்தார் மறந்
தார்கொ லிசைவண்டுகாள், விண்கொண்ட மலைமீது வின்

மாரி பொழிகின்ற விசைபோலவென், கண்கொண்ட மூலை
மீது கண்மாரி பொழிகின்ற கார்காலமே. ([illegible])

கைக்கிளை - கட்டளைக்கலித்துறை.

காரக மோரகம் வெட திரு வேங்கடக் கார்வரையோ
நீரக மோகெடு வஃகை மோதுயி லிடுபணிப்
பேரக மோதென் றிருவரங் கப்பெருங் கோயிலென் னும்
ஊரக மோவிடந் தண்காவி னின்ற வொருவருக்கே. (எரு)

வஞ்சித்துறை.

ஒருநபம் பேசுவன் - திருவரங் கே[illegible]காண்
மருவுமின் னுசமாங் - கருமவன் [illegible]சமே. (எசு)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பாசமா மடியர்பா னேசமா மடிகளும்
பைம்பொன் னாடையுஞ் செம்பொன்மா மேனியும்
ஆசையச மலருநாள் வாசமார் பகலமு
மஞ்சமென் றருள்செயுங் கஞ்சமுங் கருணையின்
தேசுலா வதனமும் மாசிலா முறுவலுஞ்
சீரிதா யெழுதுகத் தூரிநா மமுமெனக்
கீசனார் திருவரங் கேசனார் திகிரியு
மிலகு வெண் சங்குமே யுலகமெங் கெங்குமே. (எஎ)

வஞ்சிவிருத்தம்.

எங்கனு நிறைந்துறைபு மெம்பிரான்
கொங்கணுகி வண்டுமூரல் கோயில்சூழ்
உங்களூரெ யெங்கள்வரை யொன்றியே
மங்கையுனை ஏங்காங்கைகளை மானுமே. (எஅ)

இரங்கல் - கலிநிலைத்துறை.

மானார் கேசன் மேலார் மாலார் வாழ்கோயில்
தேனார் காவிற் பூவா ராயுந் தேனேபோல்

நாளு போகத் தின்பங் கண்டார் நான்வாடப்
போனார் வாரா தேதோ வேதாய் போதாவே. (எகூ)

மதங்கு - அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

போத வெனக்கெளி தானார் போத வனுக்கரி தானார்
நாதர ரங்கர்தி ருத்தா ளுடைய ரங்கின டக்கின்
ஓதும தங்கிக டத்தா லுள்ள மதங்கிய ரக்காம்
வேதம றைந்தி வல்லீர் விரையம றைந்துவிடீரே. (அ௦)

பாண் - தாழிசை.

விடா துபு மடந்தைமார் விரும்பவாயர் மாதர்தோள்
வியந்துமுன்னயர்ந்தவர்க்கு விற்குமெங்கைகொங்கைதான்
அடாதுதன்று பாணவின்ன மங்கனன்றி யிங்கன
மரங்கரன்பு கூரவின்ப ராகவல்ல வல்லவே
தாதிருக்கின் வாய்திறக்கு மெங்களைய ளுச்சிதோ
யெண்ணெய்பட்ட மெய்யிலிட்ட முத்துமுத்த ரியமும்
படாமுகந் திறந்தசைந்து மழலைவாயின் மணமறாப்
பசு நரம்பு புடைபரந்து பால்சுரந்த முலையுமே. (அக)

இரங்கல் - கட்டளைக்கலித்துறை.

முலைகொண்ட பான்மணம் வாய்மாறிற் றில்லையாம் மொய்குழலோ, அலைகொண்ட தின்னமென் கையணை மேயலை யாழிவற்றச், சிலைகொண்ட செங்கை யரங்கேசர் தாள்கொண்ட தேசமெல்லாம், விலைகொண்ட வாள்விழி யாள்சென்ற வாறெங்ஙன் வெஞ்சுரமே. (அஉ)

இரங்கல் - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வெஞ்சமங் கருதுங் கஞ்சனு மெ...
வேழமும் பரியும் வீழ்முன் பொருகா...
தஞ்சமென் றவருக் கஞ்சலென் றருளுந்...
தாயிலன் புடையார் கோயிலின் புடையார்

மஞ்சுவண் டினமுந் தஞ்சுதண் டலைவாய்
வல்லியொன் றதிலே யெல்லியுந் திகழுங்
கஞ்சமுண் டதிலே நஞ்சமுண் டதிலே
கள்ளமுண் டதுவென் னுள்ளமுண் டதுவே. ()

முதுவேனிற்காலம்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

உண்டமிழ் வாசருடன் றண்டலை மாரு[illegible]வந்
துலவிய சாளரமுங் குலவிய வாணி[illegible]வும
விண்டலர் பூவணையும் மென்பனி நீர்புழுகு[illegible]
மேனியி லும்முதிரா வேனிலு மாகியவால்
அண்டர்தொ ழுட்பெருமா ளம்புய மின்பெருமா
ளருமறை யின்பெருமா ளழகிய நம்பெருமாள்
புண்[illegible]ரி கங்கமழுந் தண்டுறை யோதிமமே
புன்னைகள் சிந்தலரே யின்னமும் வந்திலரே. ()

கூதிர்காலம் - வேற்றொலிவெண்டுறை.

இன்னிசை வேயினர் மன்னிய கோயிலை யெய்தார்போல்
பொன்னினை வாலவ[illegible] போனவி டத்தினிற் போகாதோ
மின்னிய முகிற்று[illegible] ளென்றென் மேலெல்லாம்
வன்னியின் பொ[illegible]களை வழங்கும் வாடையே. (௮௫)

கார்காலம்—[illegible]றுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வா[illegible]யாயி[illegible]ந பனியுமாய் வேனிலாய் வந்தது காரெ
ன்றே, பேடை[illegible]ற் சாயலா யன்பர்மேற் பிழைகரு
[illegible]ம்பொன், ஆ[illegible]டை நாயகன் றிருமக ளுயக னரங்
கநா யக[illegible]னெ றும், ஓடை மாவிது மதமிது பிளிறிய வொலி
யிது மழையன்றே. (௮௬)

### கட்டளைக்கலித்துறை.

மழைபோன் மரகதம் போலெம்பி ரான்வளர் கோயி லின்னீர், பிழைபோமிவர்க்கிதை யாருரைப் பாரிவர் பின்வந் தெய்த, தழைபோ யுறைத்த வருத்தம் பொருளைமகொல் சங்கரன்பால், உழைபோ யொதுங்க முயல்போய் மதிபுக் கொளித்ததுவே. (௮௭)

### கார்காலம் - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஒளிக்குமிரு சுடர்க்கவளம் விழுங்கும் பேழ்வாயுரு முழக்கத் திந்திரவி லோடை நெற்றித், தெளிக்குமழை மதக் கொண்மூக் களிற்றை மின்னற், றோட்டிமா ருதப்பாகர் துரக்குங் காலம், அளிக்குலமுங் களிக்குமயிற் குலமும் ஆடி யாடுபொழிற் றிருவரங்க ரணையாக் காலம, விளிக்கு முலைக் கருங்கடலு மொறுக்குங் காலம் விண்மேற்கு விழிக டுயின் மேவாக்காலம். (௮௮)

### இளவேனிற்காலம் - கலிநிலைத்துறை.

மேவலர்வாழ் தென்னிலங்கை மலங்கவொரு காலிரு கால் விற்குனித்தெய், யேவலர்வாழ் திருவரங்கத் தெமை யிருத்திப் போனவர்நாட் டில்லைபோலும், கோவலர்வாய்க் குழலோசைக் கானிரைகள் செவியேற்குங் குறும்புன்மா லைப், பூவலரின் மணம்பரப்பி யிளவேனில் வரவந்த பொதி யத்தென்றல். (௮௯)

### இரங்கல் - கட்டளைக்கலித்துறை.

தென்றலைக் குங்குமச் சேற்றுறைப்பொ ருள்சிமியாள்பெரிய
துன்றலைக் குந்துடிக் கும்மென்செய் வாடிய ராலழைத்த
வன்றலைக் குஞ்சரங் காத்தா யிலங்கை மலங்கவளைத்
தன்றலைக் குஞ்சரத் தாயரங் காவண்ட ராதிபனே. (௯௰)

கட்டளைக்கலிப்பா.

அண்டர் போற்றுந் திருவரங் கேசனு
ரண்ணிய ரங்கத் திருமுற்ற மெய்தினால்
பண்டு போன வளையாழி வாங்குவேன்
பாவியாது பாராமுகம் பண்ணினால்
தண்டும் வாளுஞ் சிலையு மிருக்கவே
சங்கு மாழியுந் தாருமென் பேணவை
தொண்ட ருக்கொற்றி வைத்தோமென் றேநிறைந்
துளவ மாலையைத் தொட்டுப் பறிப்பனே. (௬௧)

கலிநிலைத்துறை.

தொட்டுண்ட தயிர் வெண்ணெய்க் கன்றாய்ச்சி யுர
லோடு சூழ்ந்துகட்டக், கட்டுண்டு கழல்விர கறியாம லிருந்
தழுத கள்வன்யாரே, கட்டுண்டா னரங்கனெனக் கட்டு
ரைப்பா ராரேனுங் கங்கைசூடி, மட்டுண்ட கொன்றையான்
[illegible]மேலா னறிவரிய வடிவன்றே. (௬௨)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வடியாத பவக்கடலும் வடிந்துமூல மாயைகடந் தப்
பாற்போய் வைகுந்தஞ்சேர்ந், தடியார்கள் குழாங்கூடி யுன
தடிக்கீ ழடிமைசெய மக்கால மெக்காலந்தான், கொடியாடு
மணிமாட வயோத்திமூதூர் குடிதுறந்து திருவரங்கங்
கோயில்கொண்ட, நெடியானே யடியேனுன் முயற்சி
யின்றி நின்னருளே பார்த்திருப்ப னீசனேனே. (௬௩)

கட்டளைக்கலித்துறை.

நீசச் சமணர்க்குஞ் சூனிய வாதர்க்கு நீதியற்ற [றேன்
பூசற் பௌத்தர்க்குஞ் சைவர்க்கும் யார்க்கும் புகலுகின்

நாசப் படாவுயி ரெல்லா முதற்றந்த நாதன்கண்டீர்
ஆசற்ற சீரரங் கத்தாதி மூலத் தரும்பொருளே. (௬௪)

நேரிசைவெண்பா.

அரும்புண்ட நீகத் தடியிணைக்கென் னெஞ்சம்
இரும்புண்ட நீராவ தென்றோ—விரும்பி
அறந்திருந்துங் கோயி லரங்கா வுனைநான்
மறந்திருந்து மேற்பிறவாமல். (௬௫)

கலிவிருத்தம்.

பிறவியெனுங் கடலழுந்திப் பிணிபசியோ டிந்திரியச்,
சுறவனைக்கக் கொடுவினையின் சுழலகப்பட் டுழல்வேனை,
அறமுடையா யென்னப்பா வரங்கா வென்றுருயிருக், குற
வுடையா யடியேனை யுய்க்கொள்வ தொருநாளே. (௬௬)

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஒருபொரு ளல்லை யிருவினை யுடையே[illegible]
னுனதுதொண் டெனுந்துறை குளித்துன்
பெருகுதண் ணளியின் பாசந்தொட் டிழுத்து
பெரியதோர் முத்தியான் பெற்றேன்
திருவுமா மணியுஞ் சங்கமு மேந்திச்
செய்யதா மரைபல பூத்துக்
கருநிற முடைத்தாய் நதிபொரு தரங்கங்
கலந்ததோர் கருணைவா ரிதியே. (௬௭)

கட்டளைக்கலித்துறை.

வா[illegible]ரங்கம் வருதிருப் பாவைக்கு மண்மகட்கும்
சிரி யரங்கண் வளர்திருக் கோலமுந் தென்றிருக்கா

வேரி யரங்க விமானமுங் கோயிலு மேவித்தொழார்
பூரி யரங்கவர் கண்ணிரண் டாவன புண்ணிரண்டே. (கூஅ)

நேரிசைவெண்பா.

புண்ணு ருடம்பிறவி போதுமெனைக் கும்முனைக்கும்
எண்ணு திருந்த தினிப்போதும்—கண்ணு
குழற்காளாய் தென்னரங்கக் கோயிலாய் நின்பொற்
கழற்காளாய் நின்றேனைக் கா. (கூகூ)

கலிநிலைத்துறை.

காவிரிவாய்ப் பாம்பணைமேற் கருமுகில்போற் கண்வள
ருங் கருணைவள்ளல், பூவிரியுந் துழாயரங்கர் பொன்னடியே
தஞ்சமெனப் பொருந்திவாழ்வார், யாவரினு மிழிகுலத்தோ
ராகு மவர்கண்டீ ரிமையா நாட்டத், தேவரினு முனிவரி
னுஞ் சிவனயனின் திருவரினுஞ் சீரியோரே. (க00)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரிய வண்ணவிருத்தம்.

மழைமுகி லெனவே பணு முகந்திகழ்
வரியா வணையே யிவா ழரங்கர்தம்
எழில்பெறு மிருதா ளிலே கலம்பக
மெனவொரு தமிழ்மா லைதா னணிந்தனன்
குழலிசை யுளிமேவு கூரம் வந்தருள்
குருபர னிருபா தமேபோ தடைந்தவன்
அழகிய மணவா ளதாசனென்பவ
னடியவ ரடிகூடி வா ழுமன்பனே (க0க)

திருவரங்கக்கலம்பகம்.

முற்றிற்று.

## மதராஸ் ரிப்பன் புஸ்தகசாலை,

273, தம்புசெட்டி வீதி, சென்னை.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ விருத்திப்பிரபாகரம் ... ... | 4 | 0 | 0 |
| பக்தலீலாம்ருத வசனம் (82-பக்தர்களின் சரித்திரம்) ... | 3 | 0 | 0 |
| ஷை திக்குக் காகிதம் ... ... | 4 | 0 | 0 |
| பஞ்சதசப் பிரகரணம் (வினவிடை) ... | 1 | 0 | 0 |
| பிரபோத சந்திரோதய வசனம் ... ... | 1 | 0 | 0 |
| பிரபுலிங்கலீலை வசனம் ... ... | 0 | 12 | 0 |
| தஞ்சைவாணன் கோவை உரை ... ... | 1 | 4 | 0 |
| சூதசங்கிதை தமிழ்ச்செய்யுள் ... ... | 1 | 8 | 0 |
| இலைவதசைவகண்டனம் முதல் பாகம் ... | 2 | 0 | 0 |
| ஷை இரண்டாம் பாகம் ... ... | 1 | 8 | 0 |
| நாலடியார் மூலமும் உரையும் (காலிகோ) ... | 1 | 2 | 0 |
| காங்கிரஸ் மகாசபை ... ... | 0 | 4 | 0 |
| நாஞ்ஜீவவாதக்கட்டளை ... ... | 0 | 1 | 0 |
| ஔவைகுறள் (திக கடிதம்) ... ... | 0 | 2 | 0 |
| திருவள்ளுவர் திருக்குறள் மூலம் ... ... | 0 | 4 | 0 |
| திருவேங்கடமாலை ... ... | 0 | 0 | 9 |
| திருவேங்கடத்தந்தாதி ... ... ... | 0 | 0 | 9 |
| அழகர் அந்தாதி ... ... ... | 0 | 0 | 9 |
| சகலகலாவல்லிமாலை உரை ... ... | 0 | 1 | 0 |
| கந்தரநுபூதி உரை ... ... | 0 | 2 | 0 |
| விநாயகரகவல், இரட்டைமணிமாலை ... | 0 | 0 | 6 |
| விநாயகர், சிவ, சத்திகவசம், இலக்ஷுமி தோத்திர முதலியன ... | 0 | [illegible] | 0 |
| வேழமுகம் உலகநீதி ... ... | 0 | 0 | 6 |
| ஏகமத சங்கற்ப நிராகரணம் ... ... | 0 | 1 | 6 |
| ஆற்றெட்டுத் திருப்பதித் திருப்புகழ் ... | 0 | 4 | 0 |
| நன்னூல் மூலம் இங்கிலீஷ் நோட்டுக்குடன் ... | 0 | 1 | 6 |
| தமிழ், இங்கிலீஷ் எழுத்துப்படம் தனித்தனி ... | 0 | 0 | 6 |